பி.மு.எண். 48 நாள் : 18.08.2017

பத்திரிக்கைச் செய்தி

திருநெல்வேலி மாவட்டம், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் முறையாக நிரப்பப்படும் வரை அப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் கல்வி நலன் கருதி அக்காலிப்பணியிடங்களை தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் மூலம் நிரப்பிட சென்னை பழங்குடியினர் இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார். மேலணை, பாபநாசம் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியில் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் காலியாக உள்ளது. மேற்படி பணியிடத்தில் பழங்குடியினர் இன பட்டதாரி ஆசிரியரை ஒப்பந்த அடிப்படையில் மாதம் ஒன்றிற்கு ரூ.9000/- என்ற வீதத்தில் ஒரு கல்வி ஆண்டில் கோடை விடுமுறை தவிர்த்து 10 மாதங்களுக்கு மட்டும் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 19ன்படி முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பணியமர்த்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் 24.08.2017 அன்று பிற்பகல் 5.00 மணிக்குள் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தை சம்பந்தப்பட்ட அசல் மற்றும் நகல் சான்றுகளுடன் தொடர்பு கொள்ளவும், மேற்படி பட்டதாரி ஆசிரியர்களுக்கு 02.09.2017 அன்று சென்னை பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களால் தேர்வு நடத்தப்பட்டு தகுதியான ஆசிரியர்களை தேர்ந்தெடுத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நேர்காணல் மற்றும் மாதிரி வகுப்பு நடத்தப்பட உள்ளது என பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஒம்/- சந்தீப் நந்தூரி
மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி

/உண்மை நகல்/

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக
திருநெல்வேலி

பெறுவோர் : பிரபு மக்கள் பண்பாடு இயக்கம்
திருநெல்வேலி